
உ

சிவமயம்



இறைபதமெய்திய

அமரர்

# திரு. நாகலிங்கம் சிவகுரு

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்



அன்பை ஈந்து அறிவைப் பகர்ந்து
பண்பைக் காட்டிப் பாரினில் நாம்
நன்னெறியில் வாழ நல்வழிகாட்டி
ஈசன் இணையடி நிழலில்
இளைப்பாறச் சென்றுவிட்ட
எம் குடும்பத் தலைவரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து
இம்மலரை அன்னாரின்
பாதக்கமலங்களில்

**சமர்ப்பிக்கின்றோம்.**

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



**மலர்வு**
**06.09.1920**

**உதிர்வு**
**19.12.2002**

அமரர்

# நாகலிங்கம் சிவகுரு

அவர்கள்

## திதிவெண்பா

சித்திரபா னுயர்வருடச் சீர்மிகு மிருகசீட
அபரபட்சப் .பிரதமை முற் கூற்றில்
ஊர் மகிழும் உத்தமனார் உயர்திரு சிவகுரு
சென்றடைந்தார் சிவனார் திருப்பாதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

நீராகும் கடலுடுத்த நிலமகளாம் இலங்கைத் தேசந்தன்னில் வடபால் திகழும் யாழ்ப்பாணம் வட்டூர் தன்னில் சங்கிலியான் பரராச சேகரன் அடித் தோன்றல்வாரிக் குட்டி அவர்கள் மரபில் சீர்பூத்த சரவணமுத்து அப்பால் பிற (அதிஉயர் விசேட சித்தவைத்தியர்) அவர்கள் மூத்த மருமகன் (சின்னத்தங்கம்) அவர்களுடன் அண்ணன் சின்னப்பு தாமோதரம் பிள்ளையாம் உடன் பிறப்பு சகோதரங்களின் புத்திரியாம் சிவக் கொழுந்தும் நாகலிங்கமும் செய்துகொண்ட தவப்பயனால் மூத்தோன் ஏரம்பமூர்த்திக்கு இளயவராய் சிவகுரு என்னும் அதி நிபுணத்துவம் வாய்ந்த இளயவராய் 1920ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 06 ஆம் திகதி வட்டூர் மக்களும் பிற ஊரில் உள்ளவர்களும் வாழ அதி உயர் இராசகுலத்தில் தோன்றினார்.

சிறுவயதில் (அதாவது 14 வயது மாறி) என்றால் தந்தையை இழந்தார். தாயார் சிவக்கொழுந்துவின் மதிநுட்பத்தால் அதி உன்னத வளர்ச்சியடைய ஏதுவாயிற்று

ஆரம்பக் கல்வியை வட்டுபிளவத்தை அமெரிக்க மிஷன் பாடசாலையிலும் வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலையிலும் பயின்று 1940ம் ஆண்டு 30 பேர் தோன்றிய எட்டாம் வகுப்புப் பரீட்சை அரசினர் நடத்தியது அதில் தான் ஒருவனே சித்தியடைந்து பெரிய புகழை நாட்டினார் பின் தம் வகுப்பையும் ஒரே முறையில் சித்தி பெறச் செய்து தோட்டப் பாடசாலையில் (நூறி எஸ்ரேற்) தமிழ் ஆசிரியர் பரீட்சையில் சித்தி செய்து தமிழ் ஆசிரியர் ஆகினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் மூத்தோன் இருக்கக் காதற் கலியாணம் செய்து சந்தோஷமாய் வசந்தநாதன், வசந்தமதி, வசந்தினி, வசந்தமலர், வசந்த மாலா, வசந்தராணி, வசந்தகுமார், இமைகரன் என்னும் புத்திரபாக்கியங்களைப் பெற்று சிறப்புடன் வாழ்ந்து ஆசிரிய கலாசாலைப்படிப்பையும் பெற்று (நல்லூர் ஆசிரிய கலாசாலை) உயர்ந்த பதவியைப் பெற்று பின் நொத்தாரிசு வேலையும் பார்த்தார்.

ஊர் மக்கள் அன்னாரை வாழ்த்தியும் போற்றியும் தாழ்த்தியும் புகழ்ந்தனர் இப்படியே அன்னாருக்கு புகழ் தோன்றலாயிற்று மாதாவின் அந்திய காலத்தையும் சிறப்புடன் செய்தார். ஊர்விடயங்களையும் வம்சத்தின் வளர்ச்சியையும் தரும காரியங்களையும் அதிவிசேடமாகச் செய்துவரும் நாட்களில் சலரோகம் முட்டு இருமல் நோயினால் அவதிப் பட்டு இருக்கும் போது காலகண்டன் என்பவன் தன்னுடன் வரவேண்டும் என்று கடவுளை அரவணைத்து தன் கடமையை முடித்துக் கொண்டான்.

அன்னாரின் ஆத்துமா அதி உயர்வாம் மார்கழி திருவாதிரை நன்னாளில் அமரபஷ திதியில் ஆண்மக்களை ஈடேற்றச் செய்யும் சிவபதம் அடைந்து முத்திப் பேறு பெற்று வாழக்கடவீர் என்று வாழ்த்துவோமாக (20.12.2002)

***ஓம் சாந்தி சாந்தி சாந்தி***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டூர் ஈர்ந்த முத்து

அகவை எண்பத்து இரண்டில் வந்த
மார்கழித் திங்கள் இரண்டாயிரத்து இரண்டில்
சான்றோன் ஆசான் சிவகுரு அன்பன்
சார்ந்தனன் இன்று இறையடி தன்னுள்

வட்டூர் ஈர்ந்த முத்து வளமுடன் வாழ்ந்தமுத்து
சாதனை காட்டி நின்று சரித்திரம் படைத்தமுத்து
போதனை செய்து அறிவுபோதித்த நல்முத்து இன்று
வேதனை எமக்குத் தந்து, வெற்று நீருகியதே

மலர்ந்த முகம் மனதின் மேன்மை காட்ட
உதட்டில் பூத்த முறுவல் உள்ளத்து ஆற்றல் காட்டும்
முதிர்ந்த வெண்முடி முற்றிய அறிவைக் காட்ட
நேரிய இவர்தம் நடை நெஞ்சத்தின் திண்மைகாட்டும்

காந்திஜீ கிராம முன்னேற்றச் சங்கம்
வட்டு சிவன் இந்து சமய அபிவிருத்திச் சங்கம்
மருதடி வினாயகர் திருவிழா சங்கம்
உர்ந்தது உன் உயரிய சேவையால் இன்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிகசாலைக்கு வருவாய் நீ நித்தம்
வருகின்றபோது நாம் கலப்போம் சுகதுக்கம்
வரவில்லை மாதமொன்று வந்தது ஏக்கம்
காணாத உன் முகம், வருடியது எம் மனதை

கனத்த சுமையொன்று அழுத்தியதால் உன்மனதை
காணவில்லை உமைநாம் கண்முன்னே என இருந்தோம்
அறிந்தோம் சுகமில்லையென, அன்புடன் வீடு சென்றோம்
அறிந்தே சொல்லிவிட்டாய் அதிகநாள் தாளாதென்று

சென்றுவிட்டாய் இன்று எமைவிட்டுச் சென்றுவிட்டாய்
சென்றது உன் பூதவுடல் செல்லவில்லை புகலுடல்
சென்ற கால நினைவுகள் எம்மோடு என்றும் நிற்கும்
சென்றுவிட்ட உன் ஆத்மா அடையட்டும் சாந்தி

*ஐயாத்துறை சிறீஞானநாதன்*
*வட்டு மேற்கு*
*வட்டுக்கோட்டை*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்







## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட
முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அதியோய் நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தனே

## திருப்பல்லாண்டு

சொல்லாண டசுரு திப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள் மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்த
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

# திருப்புகழ்

கருத்தினால் விரகு செய் மடமாதர்
கலக்குமோ கனமதில் மருளாதே
ஒருத்தனாம் வகை திரு வருளாலே
உணர்ந்து நாளடிமையு முடையோனே
பருத்ததோகையில் வரு முருகோனே
பறக்கவே இயல்தெரி வயலூரா
திருத்தமாதவர் புகழ் குருநாதா
திருக்கை வேலழிய பெருமாளே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தசஷ்டி கவசம்



### காப்பு

### நேரிசை வெண்பா

**துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சிற்**
**பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் ~ கதித்தோங்கும்**
**நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தர்**
**சஷ்டி கவசந் தனை.**

### குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

### நிலைமண்டல ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுக் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கலென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிகை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரர ரரர
ரிஹண பவச ரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாருமிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரெண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெற்றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறு றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோதனென்று
நுன் திருவடியை உறுதியென்றெண்ணும்
என்றலை வைத்துள் இணை யாகாக்க
என்னுயிர்க்குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காகக்
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேலிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்கக் கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கப் பார்க்கப் பரவசம் பொடி பட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புகழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தர்களெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷயங்கள் எளிதினில் லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதிரு மருகா அமரா பதியைக்
கார்த்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலைஉறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரரா குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீக்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ள்நீங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை குறைகள்எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தாங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

(முற்றிற்று)

*திருச்சிற்றம்பலம்*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசக மென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமனிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க

சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி

சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற வதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறது மண்ணிறைந்து மிக்காய் விளக்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்

சொல்லாஅ நின்றவித் தாவர சங்மத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்

ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே

அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியோனே

மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவமென்னம் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலங்சோரு மொன்பது வாயிற் குடிலை

மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி

நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே

நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லாயுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே

கூர்த்தமெய் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுர்வாய்
மாற்றமமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப

ஆற்றேனெம் மையா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நாட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்


பல்லோரு மேத்தப் பணிந்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரம்பரை விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எமது இல்லத் தலைவன் **அமரர்**
**நாகலிங்கம் சிவகுரு** அவர்களின்
சிவபதமடைந்த செய்தி கேட்டு, இறுதிச்
சடங்கின்போது நேரிலேயும்,
பிறஇடங்களிலிருந்தும் அனுதாபம்
தெரிவித்து, மயானம் வரை வந்து
மரியாதை செலுத்தியோர்க்கும், எட்டுச்
சடங்கு, அந்தியேட்டி, சபிண்டீகரணக்
கிரிகைகளிற் கலந்து அன்னாரின் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்தனை
செய்தோர்க்கும், எமது மனமார்ந்த
நன்றியினைத் தெரிவித்துக்
கொள்ளுகின்றோம்.



**வன்னி குயிக் அச்சகம்** 140/2, **கண்டி ரோட், வவுனியா** *T.P 21499*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு ?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org